செய்தி வெளியீடு எண்:545 நாள்: 22.08.2017

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
# குறளகம், சென்னை – 108

*****

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆண்டுதோறும் தசரா பண்டிகையையொட்டி கொலு பொம்மை கண்காட்சியினை குறளகம் கதரங்காடியில் நடத்தி வருகின்றது. இது போன்று இந்த ஆண்டும் கொலு பொம்மை கண்காட்சி மற்றும் விற்பனை சென்னை குறளகத்தில் 21–08–2017 முதல் 4–10–2017 வரை 45 நாட்கள் நடைபெற உள்ளது.

இக்கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழா 21–08–2017 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் துறை அமைச்சர் திரு. ஜி.பாஸ்கரன் அவர்கள் குத்துவிளக்கேற்றி, கொலு பொம்மை கண்காட்சி மற்றும் விற்பனையை துவக்கி வைத்து புதிய பொம்மை ரகங்களை அறிமுகப்படுத்தி, கடந்த ஆண்டு அதிக விற்பனை புரிந்த கைவினஞர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசு கைத்தறி கைத்திறன், துணி நூல் மற்றும் கதர் துறை முதன்மைச் செயலர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு. இரா. சுடலை கண்ணன், இ.ஆ,ப., அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை வகித்தார்கள்.

இந்த கண்காட்சியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படுகின்ற மண்பாண்ட கூட்டுறவு சங்கங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் வாரியத்தினால் நடத்தப்படுகின்ற மண்பாண்ட அலகுகளில் தயாரிக்கப்படுகின்ற பொம்மைகள், வண்ணமிகு நிறங்களில் காண்போரை கவரும் வண்ணம் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட தெய்வீக சிற்பங்கள், டெரக்கோட்டா வகை பொம்மைகள், மண்பொம்மைகள், மரபொம்மைகள், பீங்கான் பொம்மைகள், காகித பொம்மைகள், உலோக பொம்மைகள் மற்றும் வொயிட் மெட்டல் பொம்மைகள் போன்ற விதவிதமான பொம்மைகள் காட்சிக்காகவும் மற்றும் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற ஏழை எளிய மற்றும் கிராம புற மண்பாண்ட மற்றும் பொம்மை கைவினைஞர்கள் தங்களது தயாரிப்புகளை எளிதில் சந்தைப்படுத்த இந்த கண்காட்சி பெரிதும் துணைபுரிகின்றது. இக்கண்காட்சியில் மேற்கு வங்கம், கர்நாடகம் மற்றும் புதுச்சேரி போன்ற பிற மாநிலங்களில் தயார் செய்யப்பட்ட பல்வேறுவிதமான பொம்மைகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வாண்டிற்கான கண்காட்சியில் பல புதிய வகை பொம்மைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக விநாயகர் பாரதம் இயற்றுதல் , சூரிய பகவான், சந்திர பகவான், கும்பகோணம் இராமசுவாமி செட், பத்ராசலம் இராமர் செட், அஞ்சுவை அமுதம், ராமானுஜர், செல்ல பிராணிகள் செட், போன்ற புதிய வகை பொம்மைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சி 21–08–2017 முதல் 4–10–2017 ம் தேதி வரை, காலை 10.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும். தசரா பண்டிகை காலம் நெருங்கி வரும் சூழலில் பொம்மைகள் வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு 2017 ஆகஸ்ட் 21 முதல் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெறும். இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு கொலு பொம்மைகள் வாங்க விரும்பும் பொதுமக்கள் முன்கூட்டியே வருகை தந்து தாங்கள் விரும்பும் பொம்மைகளைத் தேர்வு செய்து வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**